# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## இரண்டாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2012/2013 (ஆகஸ்ட்/செப்ரம்பர் 2015)

## EDS 2223 பிள்ளை வளர்ச்சியும் கற்றலும
## Child Growth and Study

ரம் : 03 மணித்தியாலங்கள்

ரும்பிய நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

---

(அ) ஒரு பிள்ளையின் வளர்ச்சியும் கற்றலும் விருத்தியைத் தீர்மானிக்கின்றன. இது தொடர்பாக பிள்ளை விருத்தியுடன் தோன்றும் பண்புகள் நான்கினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக?

(12 புள்ளிகள்)

(ஆ)பிள்ளைவிருத்தி பற்றிய சூழல்சார் கற்றல் கொள்கையின் முக்கியத்துவத்தை நடத்தைவாதியான ஜே.பி.வாட்சனின் கருத்துக்களுடன் ஒப்பிட்டு ஆராய்க?

(13 புள்ளிகள்)

(அ) பிள்ளையின் கற்றலுக்கான ஆயத்த நிலையானது கற்றல் செயற்பாடுகள் வெற்றியளிப்பதற்கு எந்தளவிற்குப் பங்களிப்புச் செய்கின்றன என்பதனை எடுத்துக் காட்டுக?

(12 புள்ளிகள்)

(ஆ) வளர்ச்சி, முதிர்ச்சி, கற்றல் ஆகிய உடற் தொழிற்பாடுகள் பிள்ளை விருத்தியில் முக்கிய செல்வாக்குச் செலுத்துகின்றன. பிள்ளை விருத்தியில் இவை கொண்டுள்ள இடைத்தொடர்புகள் எத்தகையவை என்பதனை ஆராய்க.

(13 புள்ளிகள்)

அ) குழந்தையின் வளர்ச்சி நிலையில் முளைய நிலைப் பருவத்தில் ஏற்படும் முக்கிய செயற்பாடுகள் பற்றிக் கருத்துரைக்குக?

(13 புள்ளிகள்)

ஆ) முதிர் மூலவுருவில் பிறப்புரிமையின் செல்வாக்குக் காரணமாக ஏற்படும் குறைபாடுகளில் தவறான அல்லது பூரணமற்ற பால் நிறமூர்த்தப் பிரிகையினால் ஏற்படும் குறைபாடே கிளின்பெல்டர் குறைபாடு எனப்படுகிறது (klinefelter's syndrome). இக்குறைபாடு எவ்வாறு ஏற்படுகின்றது என்பதனை விளக்குக?

(12 புள்ளிகள்)

04.(அ) குழந்தைப்பருவத்தில் இருவருட காலப் பிள்ளைகளின் இயக்கத்திறன் வளர்ச்சியில் எட்டுதல் - உணர்தல், நடத்தல் என்னும் தோற்றப்பாடுகள் எவ்வாறு ஒருங்கிசைகின்றன என்பதனை எடுத்துரைக்குக?

(13 புள்ளிகள்)

(ஆ) "பிள்ளை வளர்ப்பு நடைமுறைகளைத் தீர்மானிப்பதில் பெற்றோரின் நடத்தையின் இரு பரிமாணங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்." இந்த வகையில் ஏற்றுக்கொள்ளல் - மறுத்தல், சுதந்திரம் - கட்டுப்பாடு என்பனவற்றைப் பெற்றோருடன் தொடர்புபடுத்தி விளக்குக?

(12 புள்ளிகள்)

05.(அ) மனவெழுச்சி என்றால் என்ன? என்பதனைத் தெளிவுபடுத்தி மனவெழுச்சி பற்றி புலோமின் (1985) கூறிய உடல் மாற்றம் (அக ரீதியான துலங்கல்), உளவியல் மாற்றம் (அறிவு சார்ந்த எதிர்த்தாக்கம்) என்பன பற்றி விஞ்ஞான ரீதியான விளக்கம் தருக?

(13 புள்ளிகள்)

(ஆ) பாடசாலைப் புகாநிலைப் பிள்ளைகளிடத்தே எழுகின்ற எதிர்மறையான மனவெழுச்சிப் பண்புகளை ஒரு முன்பள்ளி ஆசிரியர் எவ்வாறு கற்றலுக்குச் சாதகமாகப் பயன்படுத்தலாம் என்பதனை ஆராய்க.

(12 புள்ளிகள்)

06.(அ) பிள்ளையின் ஆளுமை விருத்தியில் தனியாள் வேறுபாடுகளைப் பற்றி அல்பேட் பந்துரா (1977) கூறிய சமூகக் கற்றல் அணுகுமுறை பற்றிய கருத்துக்களை ஆராய்க?

(12 புள்ளிகள்)

(ஆ) எரிக் எரிக்சனால் முன்வைக்கப்பட்டுள்ள குழந்தை பிறந்ததிலிருந்து 41 வயது வரையான விருத்திப் பரம்பலின் ஆளுமை விருத்தி பற்றிய 8 நிலைகளையும் சுருக்கமாக விளக்குக?

(13 புள்ளிகள்)

*****